

# புனித லூர்து மாதா தேவாலயம்

45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, பேராக் மேற்கு மலேசியா
**பங்கின் குருவானவர்: அருள் தந். ரோபட் டேனியல்**
**மறைத்திரு திருத்தொண்டர் சந்தனசாமி பீட்டர்**
Tel: 05-5279349 Fax: 05-5276671
அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org



**திருத்தந்தையின் கருத்து** : **விசுவாசத்தைப் பரப்பிடுவதற்கான பணி: விசுவாசத்தைப்ப பரப்பிடும் பணியில் ஈடுபட்டுள்ள மக்கள், பண்பட்ட தங்களின் கலந்துரையாடலில், இக்கால சூழ்நிலைகளுக்கேற்ற ஒரு மொழியை கண்டடைய வேண்டுமென்று**
**டிசம்பர் மாத கரு** : **கிறிஸ்துவே இன்றியமையாதப் பரிசு**

**பங்கில் திருப்பலிகள்**

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| டிச 16 ஞா | காலை 7.00<br>காலை 9.00<br>காலை 11.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ)<br>திருப்பலி (ம) | திருவருகைக்கால 3ஆம் ஞாயிறு<br>திருவருகைக்கால 3ஆம் ஞாயிறு<br>திருவருகைக்கால 3ஆம் ஞாயிறு |
| டிச 18 செவ் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | திருவருகைக்கால வாரநாள் |
| டிச 20 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | திருவருகைக்கால வாரநாள் |
| டிச 21 வெள் | காலை 6.30 | திருப்பலி (த) | புனித பீட்டர் கனீசியு |
| டிச 22 சனி | காலை 6.30 | திருப்பலி (ஆ) | திருவருகைக்கால வாரநாள் |
| டிச 23 ஞா | காலை 7.00<br>காலை 9.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம) | திருவருகைக்கால 4ஆம் ஞாயிறு<br>திருவருகைக்கால 4ஆம் ஞாயிறு |

**பங்கு நடவடிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| டிச 17 திங் | மாலை 7.30 | புலூமா, ஈப்போ | பாவசங்கீர்த்தனம் |
| டிச 18 செவ் | காலை 8.30 | பெர். மை 1-2 | பங்கு பரிந்துரை குழு |
| டிச 19 புதன் | மாலை 8.00 | பெர். மை 2-3 & 2-5 | சீடத்துவ நிகழ்வு |
| டிச 20 வியா | மாலை 7.00 | ஆலயம் | முன்னோன் வாசகர் பயிற்சி |
| டிச 21 வெள் | மாலை 7.30 | ஆலயம் | பாடல்குழு (ஆ) |
| டிச 22 சனி | மாலை 6.00 | பங்கு மண்டபம் | கிறிஸ்துமஸ் இசை இரவு 2018 |
| டிச 23 ஞா | மாலை 5.30 | பங்கு மண்டபம் | மாற்றுத்திறன் படைத்த குழந்தைகளுக்கான கிறிஸ்துமஸ் விருந்து |

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. புத்தக விற்பனை:**

- மறைந்த தந்தை இக்னேசியஸ் குவான் அவர்களின் "நாங்கள் நினைவில் கொள்கிறோம், நாங்கள் கொண்டாடுகிறோம், நாங்கள் நம்புகிறோம்" என்ற திருப்பலி புத்தகம் விற்பனைக்கு உள்ளது. ஒரு புத்தகம் ரிம 65/-
- அன்றாட அருள் வாக்கு (விவிலிய புத்தகம்) 2019 (ஆ, த) விற்பனைக்கு உள்ளது. ஒரு புத்தகம் ரிம 20/-
- ஞாயிறு திருப்பலிகளுக்கு பிறகு பங்கு மண்டபத்தில் வாங்கிக் கொள்ளலாம்.

**2. பெற்றோர் ஆதரவுக் குழு:** மாற்றுத்திறன் படைத்த மக்களுக்காக கிறிஸ்துமஸ் விருந்து 23 டிச 2018 (ஞாயிறு) மாலை 5.30க்கு பங்கு மண்டபத்தில் நடைபெறுகிறது. இந்த சிறப்பான தருணத்தை கொண்டாடவும், ஒன்றாக இணைந்து அவர்களை மகிழ்விக்கவும் அனைவரும் வரவேற்கப்படுகிறீர்கள்.

**3. கிறிஸ்துமஸ் பஜனை 2018:** தொகுதி & அதிசக்களிலிருந்து பஜனையாளர்கள் 10 டிச ~ 19 டிச 2018 வரை கிறிஸ்துமஸ் மகிழ்ச்சியை உங்களது இல்லத்திற்கு கொண்டு வருவார்கள். எரியும் மெழுகுவர்த்தியுடன் வரும் பஜனையாளர்களையும் வரவேற்போம். வசூலிக்கப்பட்ட பணம் அனைத்தும் பங்கு ஏழைகளுக்கான நிதிக்கு சேரும்.

**4. நோயாளர்களுக்கான நற்கருணை:** அ) உங்கள் நாய்களை கட்டி போடுங்கள் ஆ) வீட்டு நோயாளர்களை முன்கூட்டியே தயார் செய்து வைத்துக்கொள்ளுங்கள். இ) நீங்கள் வீட்டில் இல்லையென்றால் நற்கருணை பணியாளர்களிடம் முன்பே தெரிவித்துவிடுங்கள்.

**5. நற்கருணை பேழை:** நீங்கள் நற்கருணை பேழையை கடந்து செல்லும்போது தலை வணங்குங்கள் அல்லது முழங்கால் இடுங்கள். உங்கள் குழந்தைகளையும் இவ்வாறு செய்ய கற்றுக்கொடுங்கள்.

**6. அடுத்த குழந்தைகள் திருமுழுக்கு (ஆங்கிலம்):** நாள்: 12 ஜனவரி 2019 (சனி), நேரம்: மாலை 4.30 மேல் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**7. கிறிஸ்துமஸ் & புத்தாண்டு விடுமுறைகள்:** பங்கு அலுவலகம் மூடப்பட்டிருக்கும்.

**கிறிஸ்துமஸ்**: 24 (திங்) ½ நாள் முதல் 27 (வியா) வரை & **புத்தாண்டு:** 1 ஜன (செவ்)

8. **கிறிஸ்துமஸ் வாழ்த்து:** மறைத்திரு திருத்தொண்டர் சந்தனசாமியும் நானும், புனித லூர்து மாதா தேவாலய பணியாளர்களுடன் இணைந்து உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி நிறைந்த கிறிஸ்துமஸ் கொண்டாட்ட வாழ்த்தினை தெரிவித்துக் கொள்கிறோம். கிறிஸ்துவின் பிறப்பு நம் ஒவ்வொருவருக்கும் சமாதானம், அன்பு, மகிழ்ச்சியை அளிப்பதாக. நாம் 2019ஆம் ஆண்டை புதிய உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் வரவேற்போம்.

**9. புனிதத்தன்மையும் இரகசியத் தன்மையும்:** குருவானவர்களுடன் அனைத்து தனிப்பட்ட சந்திப்புகள், பாவசங்கீர்த்தனம் போன்ற இவையனைத்தும் அந்தரங்கமாக கருதப்படுகிறது. எனவே புனிதமானதாகும். இந்த விவகாரத்தில் எந்த ஒரு பதிவும் அனுமதிக்கப்படாது.

**10. கிறிஸ்துமஸ் & புது வருட திருப்பலிகள்:**

| 24 டிச 2018 (திங்கள்) | 25 டிச 2018 (செவ்வாய்) | 31 டிச 2018 (திங்கள்) | 1 ஜன 2019 (செவ்வாய்) |
|---|---|---|---|
| மாலை 5.45 (ஆ, த)<br>மாலை 8.15 (ஆ)<br>இரவு 10.45 (த) | காலை 9.00 (ஆ)<br>காலை 11.00 (ம)<br>மாலை 6.00 (ஆ) | மாலை 6.00 (ஆ, த)- ஆண்டு இறுதி சடங்கு இல்லை<br>மாலை 8.00 (ஆ) - ஆண்டு இறுதி சடங்கு<br>இரவு 11.00 (த) - ஆண்டு இறுதி சடங்கு | காலை 9.00 (ஆ, ம) |

**11. பங்கு மண்டப மறுசீரமைப்பு:** லூர்து மண்டபத்தை மேம்படுத்தி முழுமையாக மறுசீரமைப்பு செய்துவிட்டோம். இது திருமண வரவேற்பு, நிச்சயதார்த்தம் மற்றும் மற்ற நிகழ்ச்சிகளுக்கும் பொதுவானது. 2019க்கான பதிவுகள் இப்போதிலிருந்து தொடங்குகிறது. பதிவு செய்வதற்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

**12. கிறிஸ்துமஸ் இசை இரவு & பங்கு மண்டபம் ஆசீர்வதித்தல்:** கிறிஸ்துமசை முன்னிட்டு கிறிஸ்துமஸ் இசை இரவு நிகழ்ச்சியின் தலைப்பு "நெஞ்சுக்குள் பிறக்கவா" 22 டிச 2018 (சனி) மாலை 6.00க்கு பங்கு மண்டபத்தில் நடைபெறும். அதிஷ்ட கூப்பன்கள் ரிம 10/- (ஒரு புத்தகம்) ஞாயிறு திருப்பலிகளுக்கு பிறகு விற்கப்படும். இந்த நிகழ்வுக்கு நிதி அளிக்க பங்கு மக்கள் தயவு செய்து கூப்பன்களை வாங்கி ஆதரவு தாருங்கள். கூப்பன்கள் பங்கு அலுவலகத்திலும் வாங்கிக்கொள்ளலாம். முடிந்தால் நிகழ்விற்கு சிவப்பு அல்லது பச்சை நிறமுடைய ஆடையை அணியுங்கள் (கிறிஸ்துமஸ் நிறம்). நமது ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் வருகை புரிந்து பங்கு மண்டபத்தை ஆசீர்வதிப்பார். வாருங்கள் ஒரு பங்கு சமூகமாக கிறிஸ்துமசை கொண்டாடுவோம். அனைத்து பங்கு மக்களுக்கும் உணவு வழங்கப்படும்.

**13. சந்தா உறைகள்:** சந்தா உறைகளை எடுத்து பங்கிற்கு பங்களிப்பு செய்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் 40% மக்கள் செலுத்தாமல் இருப்போர் தயவு செய்து உங்களின் வெறுமையான உறைகளை பங்கில் மீண்டும் ஒப்படைக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் விநியோகிக்கப்பட்ட பட்டியலின்படி கணக்கறிக்கை செய்ய வேண்டியுள்ளது.

**14. திருவருகைக்கால ஒப்புரவு சடங்கு:**

| | | |
|---|---|---|
| **டிச 17 (திங்)** | மாலை **7.00** | **புனித லூர்து அன்னை தேவாலயம், ஈப்போ** |
| டிச 18 (செவ்) | மாலை 7.00 | புனித மைக்கேல் ஆலயம், ஈப்போ |
| டிச 19 (புதன்) | மாலை 7.00 | புனித சகாய மாதா தேவாலயம், ஈப்போ கார்டன் |
| டிச 20 (வியா) | மாலை 7.00 | புனித ஞானப்பிரகாசியார் ஆலயம், தைப்பிங் |

**15. கிறிஸ்துமஸ் & புது வருடத்திற்கு வாகனங்கள் நிறுத்தும் இடங்கள்:** தயவு செய்து கிறிஸ்துமஸ் திருவிழிப்பு (24 டிச 2018) திருப்பலிகளுக்கும், புது வருட திருவிழிப்பு (31 டிச 2018) திருப்பலிகளுக்கும் உங்கள் வாகனங்களை வெஸ்லி மெத்தடிஸ்ட் பள்ளியிலும், Caltex அருகில் உள்ள B நுழைவாயிலையும் நீங்கள் பயன்படுத்தலாம். **தயவு செய்து உங்களது வாகனங்களை வீட்டிற்கு முன் நிறுத்தாதீர்கள்.! ரேலா உறுப்பினர்களின் வழிமுறைகளைப் பின்பற்றவும். உங்களது சொந்த உடைமைகளை வாகனங்களில் வைக்காதீர்கள். பங்கு மற்றும் ரேலா உறுப்பினர்கள் உங்களின் அலட்சியத்திற்கு பொறுப்பேற்கமாட்டார்கள். உங்களது ஒத்துழைப்பிற்கு நன்றி!**

**16. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டட நிதி நவம்பர் 2018 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **432,783.31** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **487,378.10** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

09/12/18 திருப்பலி வசூல்கள்: காலை 7.00 - RM 962.95 காலை 9.00 - RM 1,500.95 மொத்தம்- RM 2,463.90

**2017** - RM 20.00 **2018** - RM 1,050.00

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம் என்று ஆங்கிலத்தில் எழுதவும்